## பாடம் - 5
## காலுறைகள் மீது மஸஹ் செய்தல்

## الدرس الخامس
## المسح على الخفين

இஸ்லாமிய மார்க்கம் எளிமையாக இருப்பதனால் காலுறைகள் மீது மஸஹ் செய்வதற்கு நமக்கு அனுமதியளித்துள்ளது. காலுறைகள் மீது மஸஹ் செய்வது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறை மூலம் நிரூபணமானதாகும்.

عَنْ عَمْرِو بْنِ أُمَيَّةَ قَالَ رَأَيْتُ النَّبِيَّ ﷺ يَمْسَحُ عَلَى عِمَامَتِهِ وَخُفَّيْهِ (خ/ ٢٠٥)

وعَنْ الْمُغِيرَةِ بْنِ شُعْبَةَ قَالَ بَيْنَا أَنَا مَعَ رَسُولِ اللهِ ﷺ ذَاتَ لَيْلَةٍ إِذْ نَزَلَ فَقَضَى حَاجَتَهُ ثُمَّ جَاءَ فَصَبَبْتُ عَلَيْهِ مِنْ إِدَاوَةٍ كَانَتْ مَعِي فَتَوَضَّأَ وَمَسَحَ عَلَى خُفَّيْهِ (خ/ ٢٠٣، م/ ٢٧٤) واللفظ له

'நபி(ஸல்) தமது தலைப்பாகைக்கும் காலுறைகளுக்கும் மஸஹ் செய்வதை நான் பார்த்திருக்கிறேன்' என்று அபூஜஃபர் பின் அம்ரு (ரலி) அறிவிக்கும் ஹதீஸ் புகாரியிலும் (205), 'ஒரு நாள் இரவு நான் நபி(ஸல்) அவர்களுடன் (பயணத்தில்) இருக்கும்போது அவர்கள் ஒரு இடத்தில் இறங்கி தமது தேவையை நிறைவேற்றி விட்டு வந்தார்கள். என்னிடமிருந்த ஒரு பாத்திரத்திலிருந்து தண்ணீரை நான் அவர்களுக்கு ஊற்றினேன். அவர்கள் உளுச் செய்துவிட்டு தமது காலுறை களுக்கு மஸஹ் செய்தார்கள்' என்று முஃகீரா பின் ஷுஃபா (ரலி) அறிவிக்கும் ஹதீஸ் புகாரி(203), முஸ்லிமிலும்(274) பதிவு செய்யப்பட்டுள்ளது.

எனினும் காலுறைகள் மீது மஸஹ் செய்வதற்கு சில நிபந்தனைகள் உள்ளன. உளுச் செய்துவிட்டு காலுறை அணிந்திருக்க வேண்டும். காலுறைகளின் மேற்பகுதியில் ஈரக் கையால் தடவி மஸஹ் செய்ய வேண்டும். அடிப்பகுதியில் மஸஹ் செய்யக் கூடாது.

மஸஹ் செய்வதற்குரிய கால அளவு ஊரில் தங்கியிருப்பவருக்கு ஒரு நாளும் தொழுகையைக் கஸர் செய்யும் அளவுக்குத் தூரமாகச் செல்லும் பயணிக்கு மூன்று நாட்களுமாகும். இக்கால அளவு முடிந்து விட்டால் அல்லது மஸஹ் செய்த பின் காலுறைகளைக் கழற்றி விட்டால் அல்லது குளிப்பு கடமையாகிவிட்டால் மஸஹ் செய்தது நீங்கிவிடும்.

### உளுவை நீக்கும் காரியங்கள்

**1.**மலஜலம் கழிப்பது, காற்றுப் பிரிவது, மதி, வதி எனும் வெட்டை வெளியாவது, இந்திரியம் வெளிப்படுவது, (இந்திரியம் வெளிப்பட்டால் குளிப்பும் கடமை யாகிவிடும்) **2.**தூக்கம், **3.** ஒட்டக இறைச்சி உண்பது, **4.** உணர் விழந்து போவது.